**செ. கு. எண்: 139** **நாள்: 29.10.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 29.10.2019

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், நடுக்காட்டுப்பட்டி கிராமத்தில் 25.10.2019, அன்று திரு. பிரிட்டோ ஆரோக்கியராஜ் என்பவரின் நிலத்தில் மூடப்படாத ஆழ்துளை கிணற்றில், அவருடைய இரண்டு வயது மகன் சிறுவன் சுஜித் வில்சன் தவறி விழுந்து விட்டான் என்ற செய்தி எனக்கு மிகுந்த வேதனையை அளித்தது.

இந்த செய்தி குறித்து அறிந்தவுடன், சிறுவனை உயிருடன் மீட்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர். சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையி னர் நலத்துறை அமைச்சர் திருமதி வளர்மதி, வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர். ஜா. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் சு. சிவராசு இ.ஆ.ப ஆகியோருக்கு நான் உத்தரவிட்டிருந்தேன்.

எனது உத்தரவின் பேரில், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், இரவு பகலாக மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். இச் சிறுவனை உயிருடன் மீட்பதற்காக அதிநவீன இயந்திரங்களை கொண்டு சிறுவன் சிக்கிக் கொண்ட ஆழ்துளை கிணற்றின் அருகே புதியதாக ஒரு பெரிய ஆழ்துளை கிணறு தோண்டும் பொழுது கடினமான பாறைகள் இருந்ததால் மீட்புப் பணிகளில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன. அச்சிரமங்களை எல்லாம் வல்லுநர் குழு உதவியுடன் சரிசெய்து குழந்தையை உயிருடன் மீட்க இரவு பகலாக மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தும் சிறுவன் சுஜித்

வில்சன் சடலமாக மீட்கப்பட்டான் என்ற செய்தி எனக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது.

ஏற்கனவே ஆழ்துளை கிணறு அமைக்கும் போது, கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த விதிகளை வகுத்து, அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விதிமுறைகள் சரியாக கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இதில் கவனக்குறைவு ஏதும் இருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அரசு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இனி வருங்காலங்களில் இது போன்ற துயரச் சம்பவங்கள் நிகழாமல் இருக்க பொது மக்களும் தங்களுடைய நிலங்களில் ஆழ்துளை கிணற்றை மூடும் போது உரிய பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மீட்புப் பணிகளை இரவு பகலாக மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் சுஜித் வில்சன் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**